**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், தை மாதம் 7 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21- ம் நாள் புதன்கிழமை

**இடை மனு எண். 7/2025**

**in**

**அசல் வழக்கு எண். 38/2019**

K.R. ராமகிருஷ்ணன் ... **மனுதாரர் / வாதி**

//எதிர்//

1. G.ரங்காத்தாள்

2. S. செல்வி

3. S. பூபதி ... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.K. பிரபுராம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மகேஷன், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 ன் கீழ் மனுவின் திருத்தல் விபரத்தில் குறிப்பிட்டவாறு அசல் வழக்குரையை திருத்தம் செய்ய கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக

செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது, மனுதாரர்/வாதி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் I.A.No.3/2022 மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அதில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு, 18.06.2024 அன்று சொத்து பார்வையிடப்பட்டது. அதன் பிறகு, வழக்கறிஞர் ஆணையர் தனது அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார். ஆணையரின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, வழக்கு சொத்தின் இரண்டாம் பகுதி ஒரு பொதுப் பாதை அல்ல என்றும், அது வழக்கு சொத்தின் முதல் பகுதியின் ஒரு பகுதி என்றும் மனுதாரர்/வாதி அறிந்துகொண்டார். எனவே, அசல் வழக்கில் திருத்தம் மேற்கொள்வது அவசியமாகிறது. அசல் வழக்கை திருத்துவதன் மூலம், வழக்கின் தன்மை மற்றும் வழக்கு மூலம் மாறாது. மனுவில் விவரிக்கப்பட்டுள்ளபடி அசல் மனுவைத் திருத்த மனுதாரர்/வாதிக்கு அனுமதி வழங்கப்படாவிட்டால், மனுதாரர்/வாதி ஈடுசெய்ய முடியாத இழப்பு மற்றும் சிரமத்திற்கு ஆளாவார். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

2.1). மனு பொய்யானது, சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிற மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்/வாதி அசல் வழக்கினை காலதாமதப் படுத்தவேண்டும் என்கிற எண்ணத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதி தூய கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை. ஆரம்பத்தில் தாவா இரண்டாம் அயிட்ட சொத்து என்பது வாதி, பிரதிவாதிகளுக்கு பொதுவான தென்வடல் பாதை என்று கூறிய மனுதாரர்/வாதி தற்போது அந்த பாதை முதல் அயிட்ட தாவா சொத்தின் ஒரு பகுதி என்கிற புதிய நிலைப்பாட்டினை எடுத்துள்ளார். இதனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் என்கிற எண்ணத்துடன் மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல்

செய்துள்ளார். மேலும் இவ்வழக்கு இருதரப்பிலும் சாட்சிய விசாரணை நிறைவுற்று இரு தரப்பு வாதத்திற்கு நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர்/வாதி இவ்வழக்கின் போக்கினை மாற்ற முயற்சிக்கிறார். மனுதாரர்/வாதி அவரது முயற்சியில் வெற்றி பெற்றால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பெருத்த கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக நேரிடும். மேலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நில அளவையரை விசாரணை செய்கையில், தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்று கூறியுள்ளார். மேலும் அவர் மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இருவரது சொத்துக்களையும் ஆணையர் வரைபடத்தில் தெளிவாக காட்டியுள்ளார். அதன் பின்னரே மனுதாரர் /வாதி தரப்பில் புதிதாக வழக்குரையை திருத்தம் செய்யும் இந்த நிலைப்பாட்டினை எடுத்துள்ளார். மேலும் விசாரனை முடிவுற்ற வழக்குகளில் வழக்குரையை திருத்தம் செய்ய இயலாது. மேலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது வழக்கின் தன்மையை முற்றிலும் மாற்றக்கூடியதாக உள்ளது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. <u>தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.</u>**

4). இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. தீர்வு</u> :-**

5.1). மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு 1ம் அயிட்ட சொத்தின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள மேற்குப்புற சுவரில், வழக்குப் 2ம் அயிட்ட சொத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பழுதுபார்ப்பு மற்றும் வெள்ளையடிக்கும் பணிகளுக்கு, பிரதிவாதிகள், அவர்களது உறவினர்கள், வேலையாட்கள், முகவர்கள்

மற்றும் அவர்களது ஆட்கள் ஆகியோர்கள் எந்த வகையிலும் இடையூறு செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு 2ம் அயிட்ட சொத்தின் இருபுறமும் பிரதிவாதிகளால் கொட்டி வைக்கப்பட்டுள்ள மரக் குச்சிகள் மற்றும் தென்னை ஓலைகளை அகற்றுமாறு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பு சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு வாதி தரப்பு வாதத்திற்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

5.2). மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் I.A.No.3/2022 மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அதில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு, 18.06.2024 அன்று வழக்கு சொத்து பார்வையிடப்பட்டது. அதன் பிறகு, வழக்கறிஞர் ஆணையர் தனது அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார். ஆணையரின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, வழக்கு சொத்தின் இரண்டாம் பகுதி ஒரு பொதுப் பாதை அல்ல என்றும், அது வழக்கு சொத்தின் முதல் பகுதியின் ஒரு பகுதி என்றும் மனுதாரர்/வாதி அறிந்துகொண்டார். எனவே அசல் வழக்கில் திருத்தம் மேற்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது.

5.3). எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா 2ம் அயிட்ட சொத்து என்பது வாதி, பிரதிவாதிகளுக்கு பொதுவான தென்வடல் பாதை என்று கூறிய மனுதாரர்/வாதி தற்போது அந்த பாதை 1ம் அயிட்ட தாவா சொத்தின் ஒரு பகுதி என்கிற புதிய நிலைப்பாட்டினை எடுத்துள்ளார். இதனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் என்கிற எண்ணத்துடன் மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேலும் இவ்வழக்கு இருதரப்பிலும் சாட்சிய விசாரணை நிறைவுற்று இரு தரப்பு வாதத்திற்கு நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர்/வாதி இவ்வழக்கின் போக்கினை மாற்ற முயற்சிக்கிறார் என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

5.4). கண்ணம்பாளையம் கிராமம் க.ச.எண்.442/2 நெ நத்தத்தில் அமைந்துள்ள தாவா 1ம் அயிட்ட சொத்துக்கள் மனுதாரர்/வாதிக்கு 27.05.1988 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் பாத்தியம் என சொல்லப்பட்டுள்ளது. மேலும் I.A.No.3/2022 ல் வழக்கறிஞர் ஆணையர் தனது அறிக்கையில் "மனுதாரரின் வீடு க.ச.எண்.442/2 நெ.காலையில் மேல்புறம் உள்ள சந்தில் வடபுறம் 2.6 அடி இடம் விட்டும், தென்புறம் 2.3 அடி இடம் விட்டும், கிழபுறம் வீடு கட்டி உள்ளார்" என சொல்லப்பட்டுள்ளது. எனவே, ஆணையரின் அறிக்கையின் படி மனுதாரர் திருத்தம் கோரி மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி திருத்தமானது வழக்கின் உண்மைத் தன்மையை கண்டறிய அவசியமானதாகும்.

5.5). வாதி தரப்பில் மேற்கண்டவாறு திருத்தம் கோரி மனுதாக்கல் செய்துள்ள நிலையில், வாதியின் வழக்கை நிருபிக்கும் சுமையானது வாதியையே சாரும். வாதி தரப்பு திருத்தம் அனுமதிக்கும் பட்சத்தில் வாதிதான் வாதியின் உரிமை மற்றும் அனுபவத்தை தகுந்த ஆவணங்கள் மூலம் நிருபிக்க வேண்டும். வழக்கு சொத்தில் வாதியின் உரிமை மற்றும் அனுபவம் நிருபிக்கப்பட்டுள்ளதா? என்பது அசல் வழக்கு விசாரணையின் முடிவில் தான் தெரியவரும். எனவே அசல் வழக்கில் முழுமையான தீர்வு காண வேண்டியும், வழக்கு சொத்து சம்மந்தமாக பின்னிட்டு வழக்கு ஏற்படாமல் இருக்க அசல் வழக்கு மற்றும் அசல் வழக்கின் சொத்து விவரத்தை திருத்தம் செய்ய மேற்படி மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் நாள்

இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u>** - இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>** - இல்லை

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.7/2025 in
O.S.No.38/2019 in
Dated:21.01.2026
DMC, Sulur.